செ.வெ.எண்:69 / ஜூன் /2020 நாள்:23.06.2020

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக் குட்பட்ட 65 வார்டு பகுதிகளிலும் வீட்டில் தனிமைப் படுத்துதல் மற்றும் தனிமைப்படுத்துதல் மேலாண்மை முறையில் சிறப்பு மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---------------

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட 65 வார்டு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக வீட்டில் தனிமைப்படுத்துதல் மற்றும் தனிமைப்படுத்துதல் மேலாண்மை முறையில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள மருத்துவ அலுவலர்கள், சுகாதாரஅலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், உதவிப்பொறியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள், வருவாய் உதவியாளர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள், பரப்புரையாளர்கள் ஆகியோரைக்கொண்டு 65 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் இப்பணியில் ஆர்வமுள்ள தன்னார்வலர்களை ஈடுபடுத்தி பணிகள் மேற்கொள்வார்கள். கொரோனா தொற்று நடவடிக்கைகளில் கீழ்கண்ட பணிகளை இக்குழுவினர் மேற்கொள்வர்.

வார்டு அளவில் நுண் செயலாக்கத் இட்டத்தினை செயலாற்றுவார்கள். இதில் கொரானா தொற்று உள்ள வீடுகளை முத்திரை இடல் மற்றும் தெருக்களில் கிருமி நாசினி தெளித்தல், கபசுர குடிநீர் , சத்து மாத்திரை தொடர்ந்து வழங்குதல், தனியாக குப்பை எடுத்தல், பணியாளர்கள் முககவசம், கையுறை அணிந்தவற்றை உறுது செய்தல் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் முககவசம், சமூக இடைவெளி கை கழுவுதல் ஆலயவற்றை உறுதி செய்தல், காய்ச்சல் மற்றும் இருமல் பரிசோதனை செய்தல் போன்ற பணிகளை தினசரி மேற்கொள்வார்கள்.

கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மேற்குறிப்பிட்ட பணிகளுடன் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை பெறுவதற்கு உதவுதல் ஆகியவற்றையும் மேற்கொள்வார்கள் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**